දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்விநிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

## பொதுக்கலைமாணித் தேர்வு (வெளிவாரி)-(ஆகஸ்ட் 2016)

## ECG 1 பொருளியல் I

**அறிவுறுத்தல்கள்:**

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து (05)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
- இவ்வினாத்தாளில் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆகும்
- வரைபடத்தாள்கள் வழங்கப்படும், கணிப்பான்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- நேரம்: **மூன்று (03)** மணித்தியாலயங்கள்

---

### பகுதி I

1 பயனை உச்சப்படுத்த விரும்பும் ஒரு நுகர்வோன் பின்வரும் பயன்சார்பைக் கொண்டுள்ளதாகக் கருதுக: $U(X,Y) = X^{0.5}Y^{0.5}$,
இங்கு X மற்றும்Y என்பன நுகரப்பட்ட இரண்டு பொருட்களின் அளவுகளினை வெளிப்படுத்துகின்றது. நுகர்வோனின் வருமானம் M எனக் கொள்க. தலா அலகுக்கான X பொருளின் விலை $P_x$ இனாலும் தலா அலகுக்கான Y பொருளின் விலை $P_y$ இனாலும் தரப்பட்டுள்ளன.

i. வருமான வரையறையின் அடிப்படையில் நுகர்வோனின் நோக்கச்சார்பினை எழுதுக. (03 புள்ளிகள்)

ii. X பொருளின் விலை ரூபா 0.25 ஆகவும், Y பொருளின் விலை ரூபா 1 ஆகவும் மொத்த வருமானம் ரூபா 2 ஆகவும் இருக்கும் போதான வருமான வரையறை சமன்பாட்டினை காட்டுக. (02 புள்ளிகள்)

iii. லக்ரான்ஜியன் சார்பினை அமைக்குக (05 புள்ளிகள்)

iv. X மற்றும் Y ஆகிய இரண்டு பொருட்களினதும் உத்தம அளவுகள் எவை? (05 புள்ளிகள்)

v. சமனிலையில் மேற்படி நுகர்வோனின் மொத்தப்பயனைத் தருவிக்குக. (05 புள்ளிகள்)

2 i. நுகர்வோர் கேள்விக் கோட்பாட்டில் பயன் அணுகுமுறைக்கும் சமப்பயன் வளையி அணுகுமுறைக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (10 புள்ளிகள்)

ii. இந்த இரண்டு அணுகுமுறைகளிலும் எது விரும்பத்தக்கது? ஏன்? (05 புள்ளிகள்)

iii. மேலுள்ள இரண்டு அணுகுமுறைகளிலும் ஏதாவது ஒரு முறையினைப் பயன்படுத்தி நீர் எவ்வாறு கேள்வி வளையியினைப் பெறுவீர்? (05 புள்ளிகள்)

3 i. உற்பத்திச்சார்பு என்பதன் அர்த்தத்தினை நீர் எவ்வாறு விபரிப்பீர்? (05 புள்ளிகள்)

ii ஒரு நிறுவனத்தின் உற்பத்திச்சார்பு பின்வருமாறு தரப்பட்டுள்ளது:
$Q = f(L,K) = 4LK - 3L^2 - 2K^2 + 6K + 14K$
இங்கு Q என்பது நிறுவனத்தின் வெளியீட்டின் அளவினையும், L மற்றும் K என்பன முறையே அந் நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் ஊழியம் மற்றும் மூலதனத்தின் அளவுகளையும் குறித்து நிற்கின்றன.

a. நிறுவனத்தின் வெளியீட்டு மட்டத்தினை உச்சப்படுத்துகின்ற ஊழியம் மற்றும் முதலின் பெறுமதிகளைக் காண்க (07 புள்ளிகள்)

b. இந்த நிறுவனம் ஒரு நிறைபோட்டி நிறுவனமாக இருப்பதுடன் தமது உற்பத்தியின் தலா அலகினை ரூபா 25 இற்கு விற்பனை செய்கின்றது எனின், இலாபத்தினை உச்சப்படுத்தும் ஊழியம் மற்றும் மூலதன மட்டங்கள் என்னவாக இருக்கும்? (நிறுவனமானது தலா அலகு ஊழியத்திற்கு ரூபா 7 இனையும் தலா அலகு மூலதனத்திற்கு ரூபா 14 இனையும் செலுத்துவதாக கருதுக) (08 புள்ளிகள்)

4 i நிறுவனத்தின் சமனிலை என்றால் என்ன? நிறைபோட்டி மற்றும் தனியுரிமை நிலைமைகளின் கீழ் நிறுவனங்களின் குறுங்கால மற்றும் நீண்டகால சமனிலைகளுக்கான நிபந்தனைகளை விளக்குக. (10 புள்ளிகள்)

ii “தனியுரிமையானது தவறான வள ஒதுக்கீட்டிற்குக் காரணமாக அமைவதன் மூலம் சமூகநல இழப்பினை ஏற்படுத்துகின்றது.” இந்தக் கூற்றினை நுணுக்கமாக மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

5 பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக:

i ஒரு நிறுவனத்தின் எல்லை உற்பத்தியும் சராசரி உற்பத்தியும்

ii அரசாங்கத்தால் விதிக்கப்படும் உயர்ந்தபட்சக் கட்டுப்பாட்டு விலையினதும் குறைந்தபட்சக் கட்டுப்பாட்டு விலையினதும் நோக்கங்கள்

iii நுகர்வோர் மிகையும், உற்பத்தியாளர் மிகையும்

iv கொப்-டக்ளஸ் உற்பத்திச்சார்பு (ஒவ்வொன்றுக்கும் தலா 05 புள்ளிகள்)

## பகுதி II

6 i. நுகர்வில் ஏற்படும் ஓர் அதிகரிப்பானது பின்வருவனவற்றின் மீது ஏற்படுத்தும் விளைவு என்னவாக இருக்கும்?

a. முதலீடு (02 புள்ளிகள்)

b. பணவீக்கம் (02 புள்ளிகள்)

c. வேலைமட்டம் (02 புள்ளிகள்)

ii. ஒரு திறந்த பொருளாதார மாதிரியுரு தொடர்பான பின்வரும் தகவல்களைக் கவனத்தில் கொள்க (எல்லா தகவல்களும் மில்லியன் ரூபாவில் தரப்பட்டுள்ளன)

$C = 300 + 0.8Y_d$ ; $I = 50$ ; $G = 50$; $T = 20$ ; $TR = 20$

$X = 100$ ; $M = 20 + 0.2Y$

இங்கு, Y= தேசியவருமானம்; $Y_d$= செலவிடத்தகு வருமானம்; C = நுகர்வு;
T= வரி; G = அரசாங்கச் செலவீடு; TR = மாற்றல்கள்; I = தனியார் முதலீடு;
X = ஏற்றுமதிகள்; M = இறக்குமதிகள்

a. சமனிலைத் தேசிய வருமானத்தின் பெறுமதியினை நிர்ணயிக்குக. (04 புள்ளிகள்)

b. சமனிலைத் தேசியவருமான மட்டத்தில் நுகர்வுச் செலவீட்டினைக் கணிப்பிடுக. (05 புள்ளிகள்)

c. தனியார் முதலீடானது 10 மில்லியன் ரூபாவினால் அதிகரித்தால் புதிய சமனிலைத் தேசிய வருமானத்தின் பெறுமதியினை நிர்ணயிக்குக. (05 புள்ளிகள்)

7 “பணக்கொள்கையின் செயற்திறனானது வட்டிவீதம்சார் பணத்துக்கான கேள்வி நெகிழ்ச்சி மற்றும் வட்டிவீதம்சார் முதலீட்டுக்கான கேள்வி நெகிழ்ச்சி என்பவற்றில் தங்கியுள்ளது.” நீர் இதை ஏற்றுக்கொள்கிறீரா? காரணங்கள் தருக. வேறு எந்த வழிகளினூடாகப் பணக்கொள்கையானது ஒரு பொருளாதாரத்தில் தனியார்துறையின் செலவீட்டுத் தீர்மானங்களைப் பாதிக்கின்றது? (20 புள்ளிகள்)

8 i பிலிப்ஸ் வளையி எதனை விளக்குகின்றது? (04 புள்ளிகள்)

ii வேலையின்மைக்கான காரணங்கள் மற்றும் அதன் விளைவுகளைச் சுருக்கமாக ஆராய்க. (08 புள்ளிகள்)

iii அமைப்பு ரீதியான வேலையின்மைக்கும் உராய்வு வேலையின்மைக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக (08 புள்ளிகள்)

9 i சென்மதிநிலுவையில் பற்றாக்குறை என்ற எண்ணக்கருவினை விளக்குக. (08 புள்ளிகள்)

ii ஒரு நாட்டினுடைய சென்மதிநிலுவைச் சமனிலையின்மைக்கான குறுங்கால, மற்றும் நீண்டகாலத் தீர்வுகளை நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்க (12 புள்ளிகள்)

10 பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்புக்கள் எழுதுக:

i ஒரு திறந்த பொருளாதாரத்தில் நாணயமாற்றுவீத நிர்ணயிப்பிற் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

ii ஒரு நாணயத்தின் பெறுமதித் தேய்வும் பெறுமதியிறக்கமும்

iii பணக்கொள்கையின் குறிக்கோள்கள்

iv திரவப்பொறி (ஒவ்வொன்றுக்கும் தலா 05 புள்ளிகள்)

************************

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

# பொதுக் கலை மாணி (வெளிவாரி)த் தேர்வு - ஓகஸ்ட் 2016

## ECG 2 பொருளியல் 11

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
இவ்வினாத்தாளில் உள்ள வினாக்களின் எண்ணிக்கை 08
ஒவ்வொரு வினாவிற்கும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன
(மூன்று மணித்தியாலங்கள்)

1. (i) ‘மானிய முறை’ என்ற பதத்தினால் கருதப்படுவது யாது? (04 புள்ளிகள்)
   (ii) மேற்கு ஐரோப்பாவின் மானிய முறையின் பிரதான அம்சங்கள் எவை? (06 புள்ளிகள்)
   (iii) மேற்கு ஐரோப்பாவின் மானியமுறையின் வீழ்ச்சிச் செய்முறையினை விளக்குக. (10 புள்ளிகள்)

2. “‘கைத்தொழிற் புரட்சி’ என்ற பதமானது ஒரு நாட்டினது பொருளாதாரத்திலான வேகமான மாற்றத்தினை அல்லாமல் ஒரு அடிப்படையான மாற்றத்தினையே உண்மையில் குறித்து நிற்கின்றது.” பதினெட்டாம் மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் பெரிய பிரித்தானியாவில் கைத்தொழிற் துறை சார்ந்து ஏற்பட்ட மாற்றங்களுடன் தொடர்புபடுத்தி, இக்கூற்றினை ஆராய்ந்து, கருத்துரைக்குக. (20 புள்ளிகள்)

3. பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஐரோப்பாவின் ஏதாவது ஒரு நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியில், விவசாயத் துறையின் உருமாற்றத்தின் (transformation) பங்கினை ஆராய்க. (20 புள்ளிகள்)

4. பத்தொன்பதாம் நூற்றாண்டில், பெரிய பிரித்தானியா, ஜேர்மனி ஆகியவற்றின் பொருளாதார வளர்ச்சிச் செய்முறைகளுக்கிடையே அடையாளம் செய்யப்படக்கூடிய வேறுபாடுகளும் ஒத்த தன்மைகளும் யாவை? (20 புள்ளிகள்)

5. பத்தொன்பதாம் நூற்றாண்டில், பிரான்சின் குடித்தொகைப் பண்புகளில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களை விபரித்து, அவை அந்நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியில் ஏற்படுத்திய தாக்க விளைவுகளையும் விளக்குக. (20 புள்ளிகள்)

6. பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில், பெரிய பிரித்தானியா, ஜேர்மனி ஆகியவற்றின் பொருளாதார அபிவிருத்திச் செய்முறைகளில் அரசின் வகிபாகத்தினை ஒப்பிட்டு, வேறுபடுத்துக. (20 புள்ளிகள்)

7. (i) ஜேர்மனியில் ஸொல்வரின் (Zollverein) பிரதான அம்சங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

(ii) பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜேர்மனியின் பொருளாதார அபிவிருத்திக்கு, உள்நாட்டு வர்த்தகத்தினை விரிவுபடுத்துவதன் மூலம் ஸொல்வரின் ஆற்றியுள்ள பங்களிப்புக்களை ஆராய்க. (14 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினைப்** பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக:

(i) இரண்டாம் நில அடைப்பு இயக்கம்
(ii) போர்க்காலக் கம்யூனிசம்
(iii) சோவியத் ரஷ்யாவின் புதிய பொருளாதாரக் கொள்கை
(iv) 1815 இன் தானியச் சட்டம்
(v) வணிகவாதம் (4× 5 = 20 புள்ளிகள்)

---

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப்பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

# பொதுக் கலை மாணி (வெளிவாரி)த் தேர்வு - ஓகஸ்ட் 2016

## பொருளியல் 111
## ECG 3 பிரயோகப் பொருளியல்

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
இவ்வினாத்தாளில் உள்ள வினாக்களின் எண்ணிக்கை 10
ஒவ்வொரு வினாவிற்கும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன
(மூன்று மணித்தியாலங்கள்)

1. (i) 1977 க்கு முற்பட்ட, இலங்கையின் பொருளாதாரக் கொள்கையிலிருந்து 1977 க்கு பிற்பட்ட பொருளாதாரக் கொள்கையானது எவ்வழிகளில் வேறுபடுகின்றது? சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

   (ii) ‘சுதந்திரமடைந்த காலம் முதல், இலங்கை அரசாங்கம் ஒரு சமூக நல அரசாகச் செயற்பட்டு வருகின்றது’. இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? கருத்துரைக்குக. (10 புள்ளிகள்)

2. (i) ‘வறுமை’ என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் தருக. (04 புள்ளிகள்)

   (ii) இலங்கையில் வறுமை காணப்படுவதற்கான காரணங்களைச் சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

   (iii) “1990 முதல் இலங்கையில் வறுமை குறைவடைந்து வந்துள்ளது” இக்கூற்றினை நீர் ஏற்பீரா? விளக்குக. (08 புள்ளிகள்)

3. இலங்கையில், வெவ்வேறு கொள்கை அமுலாக்கற் காலப்பகுதிகளில் பொருளாதாரத்தின் வளர்ச்சிச் செயலாற்றத்தினைப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

4. (i) பின்வரும் காலப்பகுதிகளில் இலங்கையின் பிரதான கைத்தொழில்மயமாக்கல் உபாயங்களை விபரிக்குக:

      (அ) இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கை அமுலில் இருந்துள்ள 1977 இற்கு முற்பட்ட காலப்பகுதி

      (ஆ) ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை அமுலில் இருந்துவரும் 1977 இற்குப் பிற்பட்ட காலப்பகுதி (10 புள்ளிகள்)

   (ii) சேமிப்புத் திரட்டல் / அந்நிய செலாவணியின் உழைப்பு, பொருளாதாரத்தினைக் கைத்தொழில்மயப்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை ஆகியவற்றின் பெறுபேறுகளை ஒப்பிடுக. (10 புள்ளிகள்)

5. (i) கடந்த நான்கு தசாப்த காலமாக இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவடைந்து வருவதற்கான காரணங்களை விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) சுதந்திரமடைந்த காலம் முதல் இலங்கையின் சனத்தொகை வளர்ச்சியின் பொருளாதார தாக்க விளைவுகளைப் பரிசீலனை செய்க. (10 புள்ளிகள்)

6. (i) இலங்கையின் வேலையின்மைப் பிரச்சினையின் பிரதான பண்புகள் குறித்து ஆராய்க. (10 புள்ளிகள்)

(ii) இலங்கையின் வேலையின்மையினைக் குறைப்பதற்கான வழிமுறைகளைப் பரிந்துரைக்குக. (10 புள்ளிகள்)

7. (i) இலங்கையில் விவசாயத்துறையின் உற்பத்தித்திறனை அதிகரிப்படையச் செய்வதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்கை நடவடிக்கைகள் யாவை? (14 புள்ளிகள்)

(ii) இலங்கையின் விவசாயத்துறையின்மீது இக்கொள்கைகள் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

8. (i) இலங்கையில், பாதீட்டுப் பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்வதற்கு அரசாங்க வருமானம் போதாமல் இருப்பதற்கான காரணங்களைக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(ii) இலங்கையில் அரசாங்கச் செலவீடுகள் தொடர்ச்சியாக அதிகரித்துச்கொண்டு வருவதற்கான காரணங்கள் யாவை? (07 புள்ளிகள்)

(iii) இலங்கையின் பொருளாதாரத்தின்மீது பாதீட்டுப் பற்றாக்குறையினால் ஏற்படும் தாக்கங்களை ஆராய்க. (07 புள்ளிகள்)

9. இலங்கை தொடர்பாக, பின்வருவனவற்றின்மீது, 1977 இற்குப் பிற்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களின் விளைவுகளை கூறி, அவற்றினை விளக்குக:

(i) ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டமைப்பு
(ii) சென்மதி நிலுவை
(iii) வர்த்தக மாற்று வீதம்
(iv) வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (தலா 05 புள்ளிகள்)

10. இலங்கை தொடர்பாக, பின்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினைப்** பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக:

(i) 1977 இலிருந்து நாணய மாற்று வீதக் கொள்கை
(ii) வறுமை மற்றும் வருமான சமத்துவமின்மை என்பன தொட்பான அளவீடுகள்
(iii) பிறப்பு வீதத்தினை நிர்ணயிக்கும் காரணிகள்
(iv) வெளிநாட்டு நேரடி முதலீட்டிகளை நிர்ணயிக்கும் காரணிகள்
(v) வரி வருவாயின் உள்ளடக்கக் கூறுகள்
(vi) முழு வறுமையும், சார்பு வறுமையும் (தலா 05 புள்ளிகள்)

---